# முத்தாயம்மாள் பாலிடெக்னிக் கல்லூரியில் முப்பெரும் விழா

ராசிபுரம், பிப்.15: ராசிபுரம் முத்தாயம்மாள் பாலிடெக்னிக் கல்லூரியில், 34வது முப்பெரும் விழா நடைபெற்றது.

முத்தாயம்மாள் பாலிடெக்னிக் கல்லூரியில் 34ம் ஆண்டு விழா, விளையாட்டு விழா, விடுதி விழா ஆகிய முப்பெரும் விழா நடைபெற்றது. விழாவிற்கு முத்தாயம்மாள் கல்வி அறக்கட்டளை பொருளாளர் பிரேம்குமார் தலைமை வகித்தார். கல்வி அறக்கட்டளை தாளாளர் ராமசாமி முன்னிலை வகித்தார். ஆங்கிலத் துறை விரிவுரையாளர் குணவதி வரவேற்றார். கல்லூரி முதல்வர் விஜயகுமார் ஆண்டறிக்கை வாசித்தார்.




முத்தாயம்மாள் பாலிடெக்னிக் கல்லூரி ஆண்டு விழாவில், அதிக மதிப்பெண் பெற்ற மாணவருக்கு சிறப்பு விருந்தினர் சக்கரையப்பன், தாளாளர் ராமசாமி ஆகியோர் பரிசு வழங்கினர்.

விழாவில் சிறப்பு விருந்தினராக சக்தி ஆட்டோ காம்போனென்ட் நிறுவன டெக்னிக்கல் பிரிவின் துணைத் தலைவர் சக்கரையப்பன் கலந்து கொண்டு பேசுகையில், 'தகவல் தொடர்பு மற்றும் பொறியியல் துறையின் வளர்ச்சி, ஒவ்வொரு துறையிலும் செய்முறை பயிற்சியின் முக்கியத்துவம் ஆகியவற்றை மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ள வேண்டும்,' என்றார்.

இதனையடுத்து, வாரியத் தேர்வில் 700க்கு 700 மதிப்பெண்கள் பெற்று மாநில அளவில் சாதனை படைத்த 9 மாணவ, மாணவிகளுக்கு தங்க நாணயங்கள் மற்றும் சிறப்பு பரிசு கேடயங்கள் வழங்கினார். சிறப்பிடம் பெற்ற அனைத்து துறை மாணவ, மாணவிகளுக்கும், உறுதுணையாக இருந்த ஆசிரிய, ஆசிரியைகளுக்கும் தாளாளர் ராமசாமி, சக்கரையப்பன் உள்ளிட்டோர் 41 கிராம் தங்க நாணயங்களை வழங்கினர். நிர்வாக உறுப்பினர் விஜயகுமார், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

முதலாமாண்டு துறைத்தலைவர் சந்திரசேகர் நன்றி கூறினார்.